BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

மு. மேத்தா கவிதைகளில் பெண்ணிய சிந்தனைகள்

திருமதி ரா. வசுமதி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
முதுகலை தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி,
வேலூர்- 632002
மின்னஞ்சல்: vasumathiarumugam05@gmail.com
கைப்பேசி : 9791324371
Orcid : https://orcid.org/0009-0009-3643-0292

முனைவர் ச. சுமதி
இணைப் பேராசிரியர்,
துறைத்தலைவர்,
முதுகலை தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி,
வேலூர்-632002
மின்னஞ்சல்:drcsumathi@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உலகில் பெண்மையை போற்றாத கவிஞர் இல்லை எனலாம். "பெண்மை இல்லா கவிதை மாலுமி இல்லா நாவாய்" என்பதெல்லாம் இலக்கியத்தின் எழுத்துவடிவத்தில் மட்டுமே உள்ளது நடைமுறையில் பெண்ணிய வாழ்வு என்பது பல்வேறு விதமான இன்னல்களையே அனுபவித்து வருகின்றன குழந்தை பருவத்தில் கொண்டாடியவர்கள் காலம் செல்லச் செல்ல அவளை ஒரு அடிமையாக நினைத்து இறக்கி வைக்க நினைக்கும் போது அவள் படும் துயரங்கள் ஏராலம். காதல் என்ற கடலில் விழுந்தவன் அங்கிருந்து திருமணம் என்ற தோணியில் பயணிக்கும் போது அவளடையும் இன்னல்கள் ஏராளம் மனைவியாய், மருமகளாய், தாயாய் யாரும் மதிப்பதில்லை வரதட்சனை என்ற புயலில் சிக்கி கரையேர நினைக்கையில் மீண்டும் கடலில் தள்ளப்படுகிறாள் இவற்றையெல்லாம் கடந்து வருகையில் விதவை என்ற சீற்றத்தில் சிக்கி சின்னாபின்னமாவதை அழகான கவிதைகளில் மு.மேத்தா அவர்கள் வடித்துச் சென்றதை மையமாக வைத்து வரையப்பட்டது இவ்வாய்வு.

குறிப்புச் சொற்கள்

பெண் – வேதகால பெண் – சங்ககால பெண் – இக்காலபெண் – மு.மேத்தா கவிதையில் பெண்கள் – காதல் – கைக்கிளைக் காதல் – காதல் தோல்வி – திருமணம் – இல்லறத்தில் பெண் – தாய்மை – விதவை

முன்னுரை

ஆதிகாலந்தொட்டு பெண்மையை போற்றாதவரில்லை மனித வாழ்வின் இன்றியமையாத செயல்பாடுகள் அனைத்தும் பெண்மையை மையமிட்டதாகவே அமைந்துள்ளது. பெண்மை இல்லாத வாழ்வு நிலவு இல்லாத இருள்போன்றது அத்தகு சிறப்பு மிக்க பெண்மையை பாடாத கவிஞர்கள் இல்லை. அவளைப் பற்றிய செய்திகள் இல்லாத இலக்கியமே இல்லை எனலாம். பெண்ணைப் பற்றிய செய்திகளை பெண்களே எழுதுவதைக் காட்டிலும் ஆண் எழுத்தாளர் எழுதுவதே சிறப்புடையது எனலாம். அந்த வகையில் மு.மேத்தா அவர்களின் கவிதைகளிலும் பெண்மை பற்றிய செய்திகள் பலவற்றை வரைநச்சு சென்றுள்ளார். அதனை எடுத்தியம்புவதே அவ்வாய்வின் நோக்கம்.

பெண்

பெண்களை ஆன்றோர்களும் சான்றோர்களும், கவிஞர்களும் உயர்த்தி தெய்வமாகவும், பூமியாகவும், நதியாகவும், மலராகவும், தாயாகவும் போற்றிப் புனைந்துள்ளனர். அந்த வகையில் "பெண் மகளாகத் தோன்றி மனைவியாக வாழ்ந்து தாயாகத் தொண்டு செய்து தெய்வமாகக் காட்சியளிக்கிறாள்" என்று திரு.வி.க. சிறப்பிக்கின்றார். (திரு.வி.க. பெண்ணின் பெருமை, ப.350. திருவரசு புத்தக நிலையம், சென்னை, மு.ப.2001)

வேதகால பெண்கள்

இன்றைய காலகட்டத்தில் பெண் குழந்தைகள் பிறந்தால் பெற்றோருக்கு சுமை என்ற எண்ணமே பல பின்தங்கிய கிராமப் புறங்களில் இருந்து வருகிறது. ஆனால் வேதகாலத்தில் "அதர்வன வேதத்தில் பெண் பிறப்பதையே விழா எடுப்பதற்கான நிகழ்வாகக் கருதுகிறது." (மித்ரா, உண்ணாமலை.வீ, பாவேந்தரின் புதியதோர் உலகம் செய்வோம். மணிமேகலை பிரசூரம், தி.நகர். சென்னை – 17. மு.ப.1999)

சங்க கால பெண்கள்

சங்க கால மகளிர் கல்வி முறையில் பின்தங்கியவராக இருப்பினும் இல்லறப்பண்பில் தலைசிறந்தவர்களாக விளங்கினர் என்பதை பல தொகை நூல்கள் சான்றுபகர்கின்றன. ஆணின் கடமை பொருள் தேடுவதாகவும் பெண்ணானவள் அதனை பாதுகாப்பவளாகவும் கணவனே கண்ணெனக்காப்பவளாகவும் விளங்கினால் என்பதை,

"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
மனையுறை மகளீர்க்கு ஆடவர் உயிர்" (குறுந்தொகை, பா.எ.135:1-2)

சான்று பகர்கிறது.

இக்கால பெண்கள்

காலச்சூழல் மாறும் நிலையில் பெண்களின் நிலையும் மாறத் தொடங்கியது. சங்ககால பெண்கள் இல்லறக் கடமையை இனிதே நடத்திய காலத்தை காட்டிலும் இடைக்காலத்தில் அயலோர் வருகையில் பல்வேறு இன்னல்களுன்னு ஆளாகினர். அந்நிய படையெடுப்பின் காரணமாக கலப்பு மணம் ஏற்பட்டதால் பெண்மை புகழ்தல், இகழ்தல் என்ற சூழல் ஏற்பட்டது.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா" (கவிபாடல்கள், பா.24)

என்கிறார் கவிமணி.

மு.மேத்தா கவிதையில் பெண்கள்

பல்வேறு பொருண்மையில் கவிதை புனைந்து சமுதாய சிக்கல்களை படம்பிடித்துக் காட்டும் மு.மேத்தா அவர்கள் "என்கவிதைகள் இந்தச் சமுதாத்தைக் காண உதவும் ஜன்னல்கள்" என்கிறார். அச்சமுதாய ஜன்னல்கள் வழியே பெண்ககளைப் பற்றிய செய்திகள் பலவற்றை பறைசாற்றிச் செல்கிறார் அதிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் நடப்பியல் சூழலில் வரதட்சணைக் கொடுமை, திருமணம் ஆகாத பெண்கள், ஆணாதிக்க சூழலில் அல்லாடும் பெண்கள் என பல்வேறு பரிணாமங்களில் விளக்குகின்றன.

காதல்

ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிர்களுக்கும் பொதுவான உணர்வு காதல் இக்காதல் ஊடலும் கூடலும் நிறைந்ததாக அமைந்தது. இவ்வூடலும் கூடலும் வாழ்வின் இருபக்கங்கள் உள்ளதெனலாம். அவ்வகையில்,

"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று" (திருக்குறள், 1314)

வள்ளுவரின் குறளை அடியொற்றி காதலரின் வாழ்வைப் பற்றி கூறுகையில், "மனித வாழ்வு எனும் பூந்தோட்டத்தில் நுழைந்து தழுவும் இளந்தென்றலே காதல்.

Ee நமக்கு ஊட்டுகின்ற சிலிர்ப்பும் நெகிழ்ச்சியும், சொல்லுக்கு அடங்காதவை அதிலே வன்மையுமுண்டு, மென்மையுமுண்டு மலரினும் மென்மையானது காதல் அதனால் காதலுக்கு என்றும் முதுமை இல்லை." (சாலை.இளந்திரையன், புதிய தமிழ்க்கவிதை, ப.28) ஆண், பெண் இருவரின் நிலைப்பாட்டையும் காதல் வழி கூறுகையில்,

"குழந்தைகள்
கையில் கிடைத்த
பொம்மை போல்

உன் கையில்
கிடைத்திருக்கிறது
என் காதல்" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.9)

கைக்கிளைக் காதல்

காதல் அனைத்து உயிர்களுக்கும் பொது என்று அறிந்ததே அக்காதல் வெற்றி தோல்வியில் முடிவதற்கு முன் நிகழக்கூடிய செயல்பாடே கைக்கிளை இதனை,

"கலந்த பொழுதும் காட்சியும் அன்ன" (தொல்.பொருள்.நூ.ப.18)

என்று கண்கள் நோக்கி காதலில் முடிவதைத் தொல்காப்பியர் கூறிச் சென்றுள்ளார் இதனை ஒருதலைக் காமம் என்று கூறுவதையும், "அவற்றுள் கைக்கிளை உடையது ஒருதலைக் காமம்" (நம்பியகப்பொருள் விளக்கம், நூ.எ.3) தொல்காப்பியரும், நம்பியும் கூறிய ஒருதலைக் காதலை மு.மேத்தா அவர்கள் காதல் நிறைவேறாத காரணத்தால் காதலிக்கு சொல்லுவதாக புனையப்பட்டை கவிதை,

"அவசியம் அனுப்பிவை
உன் திருமண
அழைப்பிதழை
பரிசு விழுந்தது
யாருக்கென்று
பார்த்துக் கொள்கிறேன்!" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.42)

காதல் தோல்வி

அரும்பிய காதலை சொல்லாமல் நெஞ்சத்திற்குச் சொல்லி கைக்கிளையாக இருந்து பின்பு அன்புடைக் காமமாகி துள்ளித்திருந்து ஊர் சுற்றிய காலங்களில் பல்வேறு நீங்கா நினைவுகளைப் பெற்று பின்பு ஒரு சூழலில் அக்காதல் தோல்வி அடைந்ததால் அந்நினைவுகளை அழித்து விட்டதை,

"எரித்து முடித்தேன் உன்
காதல் கடிதங்களை
சாம்பலாய் நான்" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.10)

திருமணம்

திருமணம் பெண்ணிற்கு கிடைக்கும் பெறும் மதிப்பு இவை மனங்களின் சங்கமத்தால் ஒன்றிணையும் ஆனால், "ஒவ்வொரு பெண்ணும் பூப்படைந்து திருமணம் செய்து, குழந்தைப்பேறு அடைவதால் மட்டுமே அவளது வாழ்வு அர்த்தமுடையதாக அமையும்" (மு.முருகேஷ், பெண்ணியம் பேசும் ஹைக்கூ, ப.73) என்பது தமிழரின் திட்பமான நம்பிக்கை.

இன்று ஏனோ பணங்களால் நிச்சயிக்கப்படுகின்றன. அத்திருமணம் வியாபாரமாக மாறிவிட்டதை வரதட்சணை என்ற கொடூர அரக்கன்கையில் அகப்பட்ட மென்மையானவள் வாழ்க்கையோ,

"தெருவிலே அந்த
தேவதை நடந்தால்
லட்சம் விழிகளில்
அவளுக்கு
லட்சார்ச்சனை!
ஆனால்
அவள்
வாழவேண்டுமானால்
தரவேண்டுமாம்
வரதட்சணை!" (ஒருவானம் இரு சிறகு, ப.12)

தட்சணை தர இயலாத பெண்களின் நிலைபற்றி கூறுகையில் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று சொல்வதெல்லாம் அக்காலம் . இக்காலத்திலோ வரதட்சணையினால் நிச்சயிக்கப்படுகின்றன என்பதை,

"வைர அட்டிகையும்
வரதட்சணை பாக்கிகளும்
உன்னுடைய
தந்தை வந்து
உடனே
தராவிட்டால்
தோகையே
தொடமாட்டேன் – என்று
இளைஞர்கள் சொல்வது
இன்றைய இல்லறம்! (காத்திருந்த காற்று, ப.33)

இன்றைய சூழலில் வரதட்சணை என்ற ஆயுதத்தை கையில் கொண்டு பெண்களை துன்புறுத்துகின்றனார்.அன்று கணவனுக்காக ஊரைக் கொளுத்தினாள் கண்ணகி இன்றோ வரதட்சணை கொடுமைகளாக கட்டிய மனைவியையே கொளுத்துகின்றனர் கணவர்கள் என்பதை,

"ஒரே ஒரு கண்ணகி
ஊரை எரித்தாள்
அதற்காக
ஊர்கள் தோறும்
எத்தனை கண்ணகிகளை
கோவலர்களே வந்து
கொளுத்துகிறார்கள்!" (என்னுடைய போதி மரங்கள், ப.54)

சொல்கின்றார்.

கணவன் வீட்டில் பெண்கள்

வரதட்சணை வழங்கி கணவன் வீட்டிற்குச் சென்ற பெண்களின் நிலையை பற்றி கூறுகையில் கூட்டுக்குடும்பமாக வாழும் இடத்தில் மாமனார் மாமியார் உற்றார் உறவினரின் செயல்பாடுகள் பெண்ணிற்கு வருத்தத்தைத் தருவதாக இருக்கும் பட்சத்தில் அவளின் கணவன் யார்பக்கம் பேசுவது என்று தெரியாமல் அல்லாடும் போது வருத்தப்படுபவளாகவே,

"பழமொழிகளைச் சொல்லி
பயமுறுத்தும் மாமியார்
பொன்மொழிகளைச் சொல்லிப்
புண்படுத்தும் மாமனார்
தன்மொழியைச் சொல்லத்
தடுமாறும் கணவன்" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.29)

பெண் வாழ்வதை விளித்துச் சொல்கின்றார்.

தாய்மை

கணவன் வீட்டில் பல்வேறு விதமான இன்னல்களுக்கு ஆளான பெண்கள் தன்னுடைய கடமையை செய்ய ஒரு போதும் தவறியதில்லை. பெண்ணின் கடமையாக அதிலும் திருமணமான பெண்ணின் கடமையாக,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே" (புறநானூறு, பா.எ.312:1-2)

என்பதன் மூலம் அறியலாம்.

ஒவ்வொரு ஆடவனும் தன்னுடைய கடமைகளைப் பற்றி சிந்திப்பதில்லை பல ஆடவன் சாதாரண செயல்களுக்கும் முகம் சுளிக்கும் சூழல் இன்றைய காலகட்டத்தில் தினந்தோறும் நம் கண்களாலும் காதுகளாலும் கண்டு கேட்கிறோம் ஆனால் பெண்ணோ அவர்களைப் போல் முகம் அளிப்பதில்லை என்பதை,

"எதிரே
இடது தோளிலும்
வலது தோளிலும்
இடுப்பிலும்
மாற்றி மாற்றி
வைத்ததன்றி
தன் குழந்தையைக்
கீழே
இறக்கிவைக்காத
தாயைப் பார்த்துத்
தலை குனிந்தான்!" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.74)

இக்காட்சியைக்கண்ட இளைஞன் தன் தலையை குனிந்து கொள்ள வைப்பதை அறிந்து கொள்ளலாம்.

விதவை

சமுதாயத்தில் பெண்களின் நிலைகளில் மிகவும் கொடுமையானது கைம்பெண் வாழ்க்கை இதனை,

"நாட்டில் விதவைகள் நிலை எளியோரை
வலியோர் அடக்கும் கொடுங்கோண்மையே" (பெரியார், குடியரசு இதழ், 1929)

இங்கு யாருடைய வாழ்வில் எப்பொழுது என்ன நடக்கும் என்று எவறாலும் கணிக்க இயலாது, இன்று உள்ளவகள் நாளை இல்லை. மனித வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைந்தது அனைத்தையும் ஏற்றுக் கொள்வதே உத்தமம் அன்று முதல் இன்றுவரை பெண்களுக்கு என்று இறைவன் விடுத்த சாபம் என்றே கூறலாம். இதனை,

"நாணத்தில் கவிழும்
செந்தாமரையை
நளினமாய் எச்சரிக்கிறது
விதவையாய் நிற்கும்
வெள்ளைத் தாமரை" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.60)

கணவனை இழக்கும் பெண்கள் இழிவு படுத்தப்படுவதுமுண்டு மலர் தூவி வரவேற்பளிப்பதுமுண்டு இரு அரசாங்கத்தின் பேராசையால் சாதாரண மனிதனின் உயிர் பிரிக்கப்படும் போது அங்கு வென்ற நாடு விழாக்கோலம் பூணுகிறது தோற்ற நாட்டில் பறைமுழக்கம் கேட்கிறது. இதனை,

"மகளீர் கூட்டம்
வரவேற்பளித்தது
மலர்களைத்தூவி
எதிரி நாட்டு பெண்களை
விதவைகளாக்கி வந்த வீரர்களுக்கு" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.80)

வெற்றி விழா நடக்கிறது.

பெண்கள் சீரழிவு

பாலியல் வணிகம் (Sex Trade) பாலியல் தொழில் (Sex work) ஆனது பண்டைய சமூகத்தில் "தாசித் தொழில்" என்றே அழைக்கப்பட்டு வந்தது காலனித்துவ ஆட்சியுடன் ஆங்கிலேயே ஆணாதிக்க விழுமியங்களுக்கு அமைய ஏற்படுத்தப்பட்டிருந்த சட்டங்கள் அடையாளப்படுத்தப்படலாயிற்று" (மி.மௌனம் சுமக்கும், ப.96).

பெண்ணாக பிறந்து பேதை, பொதும்மை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற பல்வேறு படிநிலைகளைக் கடந்து தெய்வமாக போற்றப்பட்ட பெண் ஆண்களின் இச்சைக்காகவும், வறுமையின் கொடுமைக்காகவும் திசைமாறும் தென்றல்கள் பல புயலாக மாறி புறப்படுகின்றதை,

"நீ தாலி கட்டாமல்
வாழ்ந்தது கூடத்
தவறில்ல – ஒரு
வேலி கட்டி
வாழ்ந்திருக்கக் கூடாதா!" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.62)

என்று இன்றைய பெண்கள் தங்கள் வாழ்க்கையை குறிக்கோள் இல்லாமல் வாழ்ந்து மடிவதை,

"இனி
உனக்கு
கூரிய நகங்களால் கீறும்
இரவுகளும் இல்லை!
கொள்ளிக் கட்டைகளாய்ச் சீறும்
பகல்களும் இல்லை!" (ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.65)

அவலச்சுவையில் கூறிச்செல்கிறார்.

முடிவுரை

பெண் என்பவள் பலகாலம் தாயகவும், சேயாகவும், நதியாகவும், புயலாகவும், பூமியாகவும் போற்றியவர்கள் அவள் பிறப்பில் விழா எடுத்தனர். அவள் வாழ்க்கை நடத்துவதைக் கண்டு வியந்து போற்றினர், காதலில் களித்த அவள் தன்னைச் சுற்றி உள்ள உறவினரை ஆதரிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தவள் திருமண பந்தத்தில் மட்டும் எத்தனை எத்தனை இன்னல்களை சுமக்கின்றாள். வரதட்சணை கொடுமையாள் அவள் அடையும் துயரத்திற்கு அளவில்லை எனலாம். பெண் இறந்தால் ஆண் மறு மணம் செய்து கொள்ளும் பழக்கம் காலங்காலமாக இருந்து வருகிறது. ஆனால் நவீன காலத்திலும் பெண் கணவனை இழந்து வாழ்வில் வறுமைப்பிடியில் சிக்கி சீரழிக்கப்படுவதை மு.மேத்தா அவர்களின் கவிதை வழி அறியலாம்.

துணைநூற் பட்டியல்

1. திரு.வி.க. பெண்ணின் பெருமை, திருவரசு புத்தக நிலையம், சென்னை, மு.ப.2001.
2. மித்ரா, உண்ணாமலை.வீ., பாவுந்தரின் புதியதோர் உலகம் செய்வோம், மணிமேகலை பிரசூரம், மு.ப.1999.
3. சாலை.இளந்திரையன், புதிய தமிழக்கவிதை
4. மு.மேத்தா., ஆகாயத்துக்கு அடுத்த வீடு, கவிதா பப்ளிகேஷன், தி.நகர், சென்னை-17.
5. முனைவர் ச.திருஞானசம்பந்தர்., அகப்பொருள்விளக்கம், கதிர்பதிப்பகம், திருவையாறு, மு.ப.2010.
6. மு.முருகேஷ் பெண்ணியம் பேசும் தமிழ் ஹைக்கூ, சிகரம் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, மு.ப.2013.
7. மு.மேத்தா, என்னுடைய போதிமரம், கவிதா வெளியீடு, தி.நகர், சென்னை, பதிப்பு – 1984.
8. சிற்பி பாலசுப்பிரமணியன் (உரை), திருக்குறள், தாமரை பதிப்பகம், சென்னை,. ஐந்தாம் பதிப்பு 2018.
9. மாணிக்கனார்., புறநானூறு மூலமும் உரையும், வர்த்தமானர் பதிப்பகம், தி.நகர். சென்னை. பதிப்பு-1999.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.